**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW6** | | |
| **Name** | : சோனைமுத்து | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : பாண்டி | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகள் அனைவரையும் தெரியும். அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள் ஆவர். விபத்தில் இறந்துபோன பாண்டி எனது மாமா ஆவார். சம்பவத்தன்று இரவு சுமார் 09:00 மணியளவில் ரோட்டின் அருகே உள்ள எனது வீட்டில் நான் இருந்தபோது டம் என்று சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது விபத்து நடந்திருந்தது. எனது மாமா பாண்டி ரோட்டின் வலதுபக்கம் மரத்தின் அருகே அடிபட்டு கிடந்தார். அவர் மீது மோதிய வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. அடிபட்ட எனது மாமா பாண்டியை ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். எனது மாமா பாண்டி தனது மகளை பஸ் ஏற்றிவிடுவதற்காக அந்த இடத்திற்கு வந்திருந்தார். மதுரை அரசு மருத்துவமனையில் எனது மாமா மறுநாள் இறந்துவிட்டார். சம்பவயிடத்தில் பெரிய பாண்டி, சின்னபாண்டி ஆகியோர் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** அசா.1 ரத்தினம் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் இறந்ததற்கு இழப்பீடு பெறுவதற்காக அசா.1 கொடுத்து பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Sonaimuthu

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.